**தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 11 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,635.73 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,216.38 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 419.35 மில்லியன் அதாவது 25.64 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 475.79 | 436.57 | 39.22 | 8.24 |
| மூலதனம் | 1,159.94 | 779.81 | 380.13 | 32.77 |
| மொத்தம் | 1,653.73 | 1,216.38 | 419.35 | 25.64 |

## 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 13601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.00 | 5.99 | 4.50 | 8.12 | 26.00 | 16.56 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை 14.55 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0001/0106/000 | 0.39 |
| 6000/0000/00/0002/0147/000 | 0.08 |
| 6000/0000/00/0016/0093/000 | 14.08 |
| மொத்தம் | 14.55 |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

விளையாட்டுத்துறை அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 26.35 மில்லியனான முழுத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 50 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களின் தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

**(ஆ) இணக்கமின்மை**

விளையாட்டு நவீனமயப்படுத்தல் செயற்திட்ட விடயங்களின் கீழ் (136-2-4-1-2401) வாக்குப் பணப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 19,198,113 ஆக இருந்ததுடன் திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 19,392,463 ஆக இருந்தமையால் ரூபா 194,350 ஆன றேபாடு அவதானிக்கப்பட்டது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

13601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 251,746 ஆக இருந்தது. அந்நிலுவை கடன் மீதிகளில் ரூபா 117,015 தொகை சேவையை விட்டுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது. அந்நிலுவை கடன் மீதிகள் 03 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரையிலான காலமாக இருந்து வந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதி மற்றும் திறைசேரி பதிவேடுகளின் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 175,498 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 770 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

03 அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரசாங்க அலுவலகமொன்றுக்குரிய 09 வாகனங்கள் முறையாகக் கையேற்கப்படாமல் அமைச்சின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.5 செயலாற்றல்**

கீழே காட்டப்பட்டுள்ள வெளிநாட்டுப் போட்டிகளுக்காக மீளாய்வாண்டின் போது விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை விட உத்தியோகத்தர்கள் சமூகமளித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| விளையாட்டு சம்மேளனம் | நாடு | போட்டித் தொடர் | சமூகமளித்த உத்தியோகத்தர்கள் | சமூகமளித்த வீரர்கள் |
|---|---|---|---|---|
| ஒலிம்பிக் | பிரேசில் | பரா ஒலிம்பிக் போட்டிகள் | 15 | 09 |
| உதைப்பந்தாட்டம் | இந்தியா | தென் ஆசிய கோப்பை | 19 | 10 |

இதன் போது பிரேசில் பரா ஒலிம்பிக் போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டியில் ஒரு வெண்கல பதக்கம் மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்ததுடன் இந்தியாவில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் எவ்வித வெற்றியையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. சர்வதேச போட்டிகளுக்காக உத்தியோகத்தர்களைப் பங்குபெறச் செய்வதில் தெளிவான குறிப்பான கொள்கையொன்றின் அடிப்படையில் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

12 ஆவது தென் ஆசிய விளையாட்டு விழாவிற்கு சமூகமளித்த விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு வழங்கும் நோக்கில் விளையாட்டு மருத்துவ நிறுவகத்தினால் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,330,073 தொகை செலவு செய்து கொள்வனவு செய்த மருந்து இருப்புக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) விளையாட்டு விழா நடைபெறும் சந்தர்ப்பத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக விளையாட்டு சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மருந்துகளில் விநியோகிக்கப்படாமல் எஞ்சிய மருந்துகள் சில விளையாட்டு சங்கங்களால் 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரை மருத்துவ நிறுவகத்திற்கு மீள வழங்கியிருக்கவில்லை.

(ii) விளையாட்டு விழாவில் விளையாட்டு வீராங்கணைகளுக்கு வழங்கப்பட்டிருந்த மருந்துககள் தொடர்பான தகவல்களை காண்பிக்கும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 23 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 11 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 75 | 34 |
| (iv) | ஆரம்ப நிலை | 84 | 74 | 10 |
| | மொத்தம் | 242 | 183 | 59 |

இரண்டாம் நிலையில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2 பேராக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் மூன்றாக இருந்ததன் காரணமாக அங்கீகரிக்கப்படாத உத்தியோகத்தரொருவர் உள்ளவாறான பதவியணியில் உள்ளார். அதற்காக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.